
Koviloor Digital Library

வெளியீடு எண் 136.

தருமபுர ஆதீனப் பாடசாலை

ஆறாவது ஆண்டு அறிக்கை.

1946-47.



தருமபுர ஆதீனம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

1613 SAW. GANESAN
KARAIKUDI. S. I. R.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன

தேவார வேத சிவாகம பாடசாலை
ஆருவது ஆண்டு அறிக்கை

ஆரியம் தமிழோடு இசையானவன்
கூரிய குணத்தார் குறிநின்றவன்
காரிகை உடையான் கடம்பந்துறைச்
சீரியல் பத்தர் சென்றடைமின்களே.

வேதநூல் சைவநூல் என்று இரண்டே நூல்கள் என்றார் ஸ்ரீமத் அருணந்தி சிவனர். இந்நூல்களின் உண்மைப் பொருள்களையே, தமிழுலகம் செய்த பாக்கியப் பயனாகத் திருவவதாரஞ் செய்தருளித் தம் செயல் அற்றுத் தாமற்று அவனே தானேயாய் விளங்கிய உண்மை நாயன்மார்கள் அருளிச்செய்த திருமுறைகள் விளக்குகின்றன என்பது யாவரும் அறிந்த உண்மை. இத்தகைய வேதசிவாகமங்களை-திருமுறைகளைப் பொன்னேபோற் போற்றி இவைகளிற் காணப்படும் உண்மைப் பொருள்களைச் சாத்திரநூல்களின் வாயிலாக உலகிற்குத் தந்து உபதேச முறையில் உணர்த்தியவர்கள் திருக்கயி லாய பரம்பரை திருநந்தி மரபின் வழிவந்த மெய் கண்ட சந்தான குரவர்களாவார்கள்.

Koviloor Digital Library

தோற்றம்

இச்சந்தான குரவர்கள் போற்றி வந்தது போலவே இவர்கள் வழி வரு தருமபுர ஆதீனக் குருமூர்த்திகளும் இவைகளை இருகண்கள் போலப் போற்றி வளர்த்து வருகின்றார்கள். அம்முறையில் இருபத்துநான்காவது மகாசந்நிதானமாக எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் செய்த அரும்பணிகள் பல சிறந்தன. அவைகளுள் சமயக் கல்வியைப் பரவச்செய்யும் நோக்கத்துடன் பாடசாலை நிறுவியதும் ஒன்று.

பாடசாலைகளின் நிர்ணயவிதிகள் சென்ற ஆண்டில் புத்தகமாக அச்சிடப்பட்டிருக்கிறது. அதில் மாணவர்களின் தகுதி, கடமை, பாட விவரங்களெல்லாம் கண்டு கொள்ளலாம்.

தேவாரப்பகுதி:— நால்வர் காட்டிய நன்னெறி உலகில் நிலைபெற 1941ஆம் மார்ச்சீ தொடங்கப் பெற்றது. பரம்பரைச் சைவச்சிறுவர்கட்குத் திருமுறை, இலக்கணம், இலக்கியம், சமயம் ஆகிய பாடங்கள் சிறப்புப் பாடங்களாகவும் இசை வடமொழி ஆங்கிலம் கணிதம் முதலியன பொதுப் பாடங்களாகவும் கற்பிக்கப்படுகின்றன. சமய ஒழுக்கங்கள் பயிற்றுவிக்கவும் சமயக்கல்வி பெறவும் வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இப்பிரிவில் பயில்கின்ற மாணவர்கள் பதினொருவர்.

Koviloor Digital Library

சிவாகமப்பகுதி:- 1942-ல் ஆரம்பிக்கப்பெற்றது. ஆலயங்களில் அருச்சனைபுரியும் ஆதிசைவ மரபினர்கள் வசதிக்குறைவினாலும், மாதொருபாகனார்க்கு வழி வழி அடிமை செய்யும் வேதியர் குலத்துள் பிறந்ததனாலேயே பூஜைசெய்ய உரிமையுள்ளவர்களாக அமைந்திருப்பதனாலும் பூஜைக்கு அவசியமான ஆகமத்தேர்ச்சியில் அவர்கள் கருத்துச்செல்வதில்லை. கிரியாவிதியின் முறையும் பொருளும் அறியாமலேயே பூஜைசெய்து வருகிறார்கள் அக்குறையினை நீக்கவே ஆதி சைவ மரபினருக்கென இது நிறுவப் பெற்றது. வேதசிவாகமங்கள் சமயநூல்கள் ஆகிய சிறப்புப்பாடங்களோடு மேற்குறித்தபொது அறிவுப் பாடங்களும் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. இப்பிரிவில் இப்பொழுது பயிலும் மாணவர்கள் பதினொண்மர்.

எல்லாப் பாடங்களும் தனித்தனி ஆசிரியர்களைக்கொண்டு போதிக்கச் செய்யப்பட்டு வருகின்றன. இப்பாடங்களை ஐந்தாண்டுத் திட்டத்தில் வகுத்துக்கொண்டு கால அட்டவணைப்படி வரன்முறையுடன் பயிற்றுவிக்கப்பட்டுவருகின்றன.

தேவார பாராயணத்திற்குத் துணைக்கருவி வாசிக்கவும், விரும்பும் மாணவர்களுக்குக் கற்பிக்கவும் பிடில்ஆசிரியர் ஒருவரையும் நியமனம்செய்யப் பெற்றிருக்கிறது.

இத்தகைய சிறப்புடன் விளங்கும் இக்கல்வி நிலையங்களில் பயில்கின்ற மாணவர்களின் பிற்கால

Koviloor Digital Library

வாழ்க்கைக்குச் சாதகமாக மொழிஅறிவு பெறக் கூடிய வகையில் இங்கிலையங்களை விரிவுபடுத்த வேண்டுமென்று இப்பொழுது ஞானபீடாதிபதியாய் விளங்கி வருகின்ற 25-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள் திருவுள்ளங்கொண்டார்கள். அதன்படி தேவார பாடசாலை மாணவர்களுக்குச் சென்ற ஆண்டில் (1946) ல் தமிழ் வித்துவான் புகு முக வகுப்புத் (Entrance) தேர்வுப் பாடங்களைப் போதிக்க மாயூரம் நாஷனல் ஸ்கூல் தமிழாசிரியர் வித்துவான் திரு N. S. கோபால கிருஷ்ண பிள்ளை அவர்களைக்கொண்டு வகுப்பு (Speacial Class) நடத்தப்பெற்றது. G.முருகையன், S. தண்டபாணி, S. குருசாமி ஆகிய தேவாரப்பகுதி மாணவர்கள் மூவரும், கந்தசாமித்தம்பிரான், சோமசுந்தரத்தம்பிரான், * மாணிக்கவாசகத் தம்பிரான் * சுவாமிநாதக்குட்டி ஆகிய திருக்கூட்டத்து அடியார்கள் நால்வரும் பயிற்சி பெற்றார்கள். சுவாமிநாதக்குட்டி நீங்கலாக ஏனைய அறுவரும் தேர்வு எழுதினர்கள். ஐவர்கள் தேர்ச்சியுற்றார்கள்.

1. கந்தசாமித்தம்பிரான். 2. சோமசுந்தரத்தம்பிரான்.
3. G. முருகையன். 4. S. தண்டபாணி
5. S. குருசாமி.

---

* இவ்விருவர்களும் தேவாரபாடசாலையில்பயின்று ஆதீனத்தில் ஆச்சிரமம் பெற்றவர்கள்.

Koviloor Digital Library

இதனைக்கண்ட ஸ்ரீ-லஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் சென்னைச் சர்வகலாசாலை யாரின் அங்கீகாரம்பெற்ற கீழ்த்திசைப்பல்கலைக்கல்லூரி ஒன்றை ஆதீனத்திலேயே நிறுவத் திருவுள்ளங் கொண்டார்கள். 2—8—46ல் கல்லூரி தொடங்கப்பெற்றது. அதில் தேவாரபாடசாலை மாணவர்களுக்கு வசதியாகத்தமிழ்வித்துவான்பகுதி வகுப்புக்களும், ஆகமபாடசாலை மாணவர்களுக்கு வசதியாக சிரோமணிப் பகுதி வகுப்புக்களும் நடைபெற்று வருகின்றன. இவ்வாண்டில் தேவாரப் பகுதி மாணவர்களில் S. ஆறுமுகம், K. குஞ்சிதபாதம், K. தியாகராஜன், ஆகிய மூவர், அடியார்களில் மாணிக்கவாசகத் தம்பிரான், சாமிநாதக்குட்டி ஆகிய இருவர் ஆக ஐவர் தமிழ்வித்வான் புகுமுக (Entrance) வகுப்புத் தேர்வும், ஆகமப்பகுதிமாணவர்களில் M. ராஜம், V.சந்திரசேகரன், S. பாலசுப்பிரமணியன் ஆகிய மூவர் சம்ஸ்கிருதபிரவேச (Entrance) வகுப்புத் தேர்வும் எழுதியுள்ளார்கள்.

இவ்வாறு ஆரம்பமுதல் வாழ்க்கையினைத் திறம்பட நடாத்துதற்கேற்ற மொழிஅறிவு பெறக்கூடிய முடிவு வகுப்புவரையிலும் மாணவர்கள் ஓரிடத்திலேயே பயின்று சிறப்புற்றுவிளங்குமாறு தருமபுர ஆதீனக் கல்வி நிலையங்கள் அமைந்திருக்கின்றன.

உதவிகள்

வேத சிவாகம பாடசாலைகளில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் உணவு உடை உறையுள்

Koviloor Digital Library

புத்தகம் முதலியன எல்லாம் இலவசமாக வழங்கப் படுகின்றன. வயித்திய உதவியும் அளிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாகப் பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் செய்யும் உதவிகள் அனைத்தும் செய்யப் படுகின்றன என்று சொல்லலாம்.

கடமைகள்

மாணவர்கள் நாடோறும் கால அட்டவணைப் படி பாடங்களைக் கற்று வருவதோடு நாடோறும் மாலையில் தேவாரபாடசாலை மாணவர்கள் ஸ்ரீ ஞான புரீஸ்வரர் ஆலயத்தில் திருமுறைப் பாராயணமும், சிவாகம பாடசாலை மாணவர்கள் ஸ்ரீ தர்ப்பபுரீஸ்வரர் ஆலயத்தில் வேத பாராயணமும் செய்து வருகின்றார்கள். இதுவேயன்றி ஆதீனத்துக்குச் சொந்தமான தேவஸ்தானங்களில் நடைபெறும் உற்சவகாலங்களிலும் உத்திரவுப்படி சென்று பணி புரிந்து வருகின்றார்கள். விரும்பி அழைக்கும் இதர உற்சவங்களுக்கும் கோஷ்டியாகவே சென்று தொண்டாற்றி வருகின்றார்கள்.

அதன்படி இதுகாறும் வேதாரண்யம், திருப்பனந்தாள், சிதம்பரம், திருச்சி, திருநெல்வேலி, திருவாரூர், திருநள்ளாறு, சீகாழி, புள்ளிருக்கு வேளூர், அச்சரபுரம், திருவேட்களம், மாயூரம் குமாரக்கட்டளை, திருக்கோளிலி, மயிலாப்பூர், திருவொற்றியூர் ஆகிய பல தலங்களில் சென்று பணியாற்றியுள்ளார்கள். அஃதன்றி, திருமுறை விழாவிலும் மகாநாடுகளிலும் கலந்துகொள்கின்றார்கள்.

Koviloor Digital Library

மாணவர் கழகம்

பாடசாலைகளில் பயிலுகின்ற மாணவர்கள் பிற்காலத்தில் சைவப் பயிர் வளர்க்கும் சொற்பெருங் கொண்டலாகத்திகழ்தற்பொருட்டு இது ஏற்படுத்தப்பட்டது. சனிக்கிழமை தோறும் ஆதீன மடாலய பூஜை மண்டபத்தில் ஆசிரியர்கள் தலைமையின் கீழ் நடைபெற்று வந்தது. மாணவர்களுள் இருவர் அல்லது மூவர் சொற்பொழிவு நிகழ்த்திவருகின்றார்கள். இக்கழகம் இவ்வாண்டு ஆதீனத்தில் தொடங்கப்பெற்ற கீழ்த்திசைப் பல்கலைக்கல்லூரியுடன் இணைக்கப்பட்டு நால்வர் நன்மொழி மன்றம் என்னும் பெயருடன் திகழ்கின்றது. கல்லூரி மாணவர்களின் வசதிக்காக இப்பொழுது கூட்டம் நிகழும் நாள் வெள்ளிக்கிழமையாக மாற்றப்பட்டு நடந்துவருகிறது.

திருவையாறு அரசர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் திரு. இராமகோவிந்தசாமி பிள்ளை அவர்கள், திருவாரூர் இராஜாங்கக்கட்டளை கட்டளை விசாரணை ஸ்ரீமத் இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகளவர்கள், வேளூர் கட்டளை விசாரணை ஸ்ரீமத் நாகலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள், திருச்சி ஸ்ரீமத் மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளவர்கள். நாகர்கோயில் பண்டிதபூஷணம் திரு. K. ஆறுமுக நாவலர் அவர்கள் ஆகிய பல அறிஞர்களது விரிவுரைகளை மாணவர்கள் கேட்டு இன்புற்றனர்.

Koviloor Digital Library

ஆண்டுத் தேர்வும் விழாவும்

மாதந்தோறும் நடைபெறும் தேர்வுகளே அன்றி ஆண்டுக்கு மூன்றுமுறை சிறப்புத்தேர்வுகள் நடைபெறுகின்றன. ஆண்டு முடிவுத் தேர்வு மட்டும் வெளியூர் அறிஞர்களைக்கொண்டு நடத்தப்பட்டு வருகிறது. அதில் அதிகமார்க்கு வாங்குபவர்களுக்கு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் திருவுள்ளக் குறிப்பின்படி ஆண்டு விழாவில் பரிசுகள் வழங்கிவரப்படுகின்றன.

முதல் ஆண்டில் திருவிடைமருதூர் தேவார ஆசிரியர் வித்துவான் திரு. மு. நடராஜதேசிகரவர்களைக் கொண்டு தேவாரபாடசாலை மாணவர்களுக்குப் பரீட்சை நடத்தப்பெற்றது. ஆகமபாடசாலை மாணவர்களுக்குப் பருத்தியூர் சிவஸ்ரீ சுப்பிரமணிய சிவாசாரியார் அவர்களைக்கொண்டு பரீட்சை நடத்தப்பெற்றது. விழாவிற்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்து, தேர்ந்தமாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கி ஊக்கமளித்த பெரியார் அப்பொழுது திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேஸ்வர சுவாமி தேவஸ்தான கட்டளை விசாரணையாக இருந்தவர்களும் இப்பொழுது திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவர்களாக விளங்கிவருபவர்களுமான ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகளாவர்கள். இவ் ஆண்டு விழாவின் சார்பில் திருமுறைத் திருவிழாவும் திருமுறை ஊர்வலமும் நடைபெற்றன.

Koviloor Digital Library

பரிசு பெற்றோர்கள்

தேவாரப்பகுதி மாணவர்கள்

முதற்பரிசு S. தண்டபாணி

2-வதுபரிசு S. ஆறுமுகம்

3-வதுபரிசு S. சொக்கலிங்கம்

ஆகமப்பகுதி மாணவர்கள்

முதற்பரிசு M. ராஜும்

2-வதுபரிசு V. பாலசுப்பிரமணியன்

இரண்டாவது ஆண்டுவிழா 24-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் பத்தாண்டு ஆட்சிவிழாவின் இறுதிநாளன்று மாணவர்நாள் என்றபெயருடன் கொண்டாடப்பட்டது. இவ்விழாத்தலைவர், பழனி ஶைவசித்தாந்த சரபம் சி-வ-ஸ்ரீ ஈசான சிவாசாரியாரவர்கள். பரிசு வழங்கிச் சிறப்பித்தவர்கள், ஸ்ரீமத் மௌன சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகளவர்கள். தேவகோட்டை, தருமபுர ஆதீன வித்துவான் பாலகவி வயிநாகரம் திரு. வே. இராமநாதன் செட்டியாரவர்கள், தருமபுர ஆதீனச் சைவப் பிரசாரகர் திரு. மீ. சுந்தரம் பிள்ளை அவர்கள், திரு. பூ. சமரபுரி முதலியார் அவர்கள் ஆகியோர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். திருவிடைமருதூர், வித்துவான், திரு. மு. நடராஜ

Koviloor Digital Library

தேசிகர் அவர்கள் தேவார பாடசாலை மாணவர் களையும், தருமபுர ஆதீனம் சிவஸ்ரீ சுவாமிநாத சிவாசாரியார் அவர்கள் வேதசிவாகம பாடசாலை மாணவர்களையும் பரீக்ஷித்தார்கள்.

பரிசுபெற்றோர்கள்

தேவாரப்பகுதி மாணவர்கள்

முதற்பரிசு S. தண்டபாணி
2-வதுபரிசு G. புருஷையன்
3-வதுபரிசு S. குருசாமி

ஆகமப்பகுதி மாணவர்கள்

முதற்பரிசு M. ராஜும்
2-வதுபரிசு V. சந்திரசேகரன்

மூன்றுவது நான்காவது ஆண்டுவிழா 1944 ல் கொண்டாடப்பெற்றது. தேவார பாடசாலைக்குப் பரீக்ஷாதிகாரியாகச் சிதம்பரம் தேவார ஆசிரியர் திரு. இராமலிங்க ஓதுவார் அவர்களை நியமித்துப் பரிட்சை நடத்தப்பட்டது. சிவஸ்ரீ சுவாமிநாத சிவாசாரியார் அவர்கள் வேத சிவாகம பாடசாலை மாணவர்களுக்கு பரிட்சை நடத்தினார்கள். ஆதீனத் திங்கள் வெளியீடாகிய ஞானசம்பந்தத்தின் ஆசிரிய ராக ஸ்ரீமத் சிவகுருநாதத் தம்பிரான் சுவாமிகள் என்ற பெயருடன் அன்று விளங்கியவர்களும்; இப்பொழுது 25வது மகா சந்நிதானமாக ஆட்சி நடாத்துகின்றவர்களுமான ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகளவர்கள் இவ்

Koviloor Digital Library

விழாவிற்குத் தலைமை வகித்துச் சிறப்பித்தார்கள். விழாக்கூட்டத்தில் பரிசுகள்வழங்கப்பட்டன. இரவு அப்பூதி அடிகள் சரித்திரத்தை நாடகமாக மாணவர்கள் நடத்திக் காட்டினார்கள்.

பரிசு பெற்றோர்கள்

தேவாரப்பகுதி மாணவர்கள்

முதற்பரிசு S. தண்டபாணி
2-வதுபரிசு S. குருசாமி
3-வதுபரிசு G. முருகையன்

ஆகமப்பகுதி மாணவர்கள்

முதற்பரிசு S. பாலசுப்பிரமணியன்
2-வதுபரிசு M. ராஜம்

நாடகத்தில் பரிசுபெற்றவர்

தேவாரப்பகுதிமாணவன் P. சுவாமிநாதன்

ஐந்தாவது ஆண்டில் சிதம்பரம், தேவார ஆசிரியர் பிர்மஸ்ரீ லெட்சுமண அய்யர் அவர்களைக்கொண்டு பரீட்சைகள் நடத்துவிக்கப்பெற்றன.

இவ்வாண்டில், 11, 12—4—47, ஆகிய இருநாட்களில் ஆதீனப்பல்கலைக் கல்லூரித்தலைவர் பிர்மஸ்ரீ மகாலிங்க சாஸ்திரிகள் M. A. B. L. அவர்கள், வடமொழிப் பேராசிரியர் ஸ்ரீமத் வேதாந்த சிரோமணி

Koviloor Digital Library

K. ராஜகோபால சாஸ்திரிகளவர்கள் ஆகியோர் களைக் கொண்டு வேதசிவாகம பாடசாலை மாணவர் களுக்குப் பரிட்சை நடத்துவிக்கப்பெற்றது. 15, 16—4—47 ஆகிய இருநாட்களில் தேவாரபாட சாலையில் அண்ணுமலைப் பல்கலைக்கழகத் தேவார ஆசிரியர் திரு. சுப்ரமணிய முதலியார் அவர்களைக் கொண்டு தேவார இசைப் பரீக்ஷைகளும், ஆதீனக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப்பேராசிரியர் வித்து வான் திரு. பு. சி. புன்னை வனநாத முதலியார் அவர்களைக் கொண்டு இலக்கண இலக்கிய சமயப் பரீட்சைகளும் நடத்துவிக்கப்பெற்றன.

நிகழும் சர்வசித்து ஆண்டு சித்திரைத்திங்கள் கூஅம் நாளாகிய இந்நன்னுளில் நடைபெறும் ஆரு வது ஆண்டுவிழா நிகழ்ச்சிப் பேரவைத் தலைமை தாங்கும் பெரியாராகிய சென்னை திருவாளர் **வித்துவான், தெ. பொ. மீனுட்சிசுந்தரம் பிள்ளை M. A. B. L. M. O. L.** அவர்களுக்கு இப்பாடசாலை நிர்வாகி கள் ஆசிரியர்கள் சார்பில் சொல்லத்தகும் நன்றி யறிதலை மிகுந்த அன்போடும் மகிழ்ச்சியோடும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். எங்கள் அழைப் பிற்கிணங்கி வந்துசிறப்பித்த அன்பர்களுக்கும் எம் நன்றி உரித்தாகுக. தென் மொழி வடமொழி ஆகிய இரு பொன்மொழிகளையும் இருகண்மணிகள் போலப் போற்றிவரும் இவ்வாதீன கர்த்தராகிய ஸ்ரீலஸ்ரீமகாசந்நிதானம் அவர்களின்அருளாட்சிச் செங்கோல் பொற்கோட்டிமயமும் பொதியமும் போன்று என்றும் நின்றுநிலவி இன்பளிப்பதாக.

Koviloor Digital Library

பாடசாலை ஆசிரியர்கள்

தேவாரம்

திரு. R. வேலாயுத ஓதுவார்

சிவாகமம்

சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

இலக்கணம், இலக்கியம், சமயம்

திரு. மீ, சுந்தரம் பிள்ளை

வேதம்

பிர்மஸ்ரீ. K. நாராயண சாஸ்திரிகள்

இசை

திரு. M. சுப்பிரமணிய முதலியார்

பிடில் (துணைக்கருவி)

திரு. சண்முகசுந்தர தேசிகர்

சாஸ்திரம்

வேதாந்த சிரோமணி.

பிர்மஸ்ரீ K. ராஜகோபால சாஸ்திரிகள்

(தருமபுர ஆதின கீழ்த்திசைப்பல்கலைக்கல்லூரி வடமொழிப்பேராசிரியர்)

பொதுஅறிவுப்பாடங்களை (இப்பொழுதுவேளூர் தேவஸ்தானம் கட்டளை விசாரணையாக இருந்து வரும்) ஸ்ரீமத் நாகலிங்கத்தம்பிரான் சுவாமிகள் போதித்துவந்தார்கள். பிறகுகந்தசாமித்தம்பிரான் சுவாமிகள் இவ்வகுப்பினை நடத்தி வந்தார்கள்.

Koviloor Digital Library

1613

தேவார வேத சிவாகம பாடசாலைகளின்

செலவு விபரங்களை

நெ.	பெயர்.	1350 பசலி 2-3-41 முதல்			1351 பசலி		
1	சம்பளம்	29	8	0	586	5	3
2	ஆபீஸ் ஸ்டேஷனரி	2	10	9	45	2	3
3	மாணவர் ஸ்டேஷனரி (புத்தகங்கள் உள்பட)	28	15	9	125	4	0
4	சாப்பாட்டுச்செலவு	90	10	10	1746	3	11
5	பலவகைச்செலவு	53	8	8	166	4	0
6	தளவாடக் கொள்முதல்	189	11	3	370	7	9
7	டை ரிப்பேர் செலவு	4	8	8	12	1	3
8	போக்குவரத்து செலவு						
9	வைத்தியச் செலவு						
10	எறுபாடுச் செலவு (ஆடை உள்பட)						
11	வருஷக்கொண்டாட்டம்						
	ஆக ரூ.	399	9	11	3051	12	5

Koviloor Digital Library

ஆரம்பம் முதல் பசலி தோறும்
காட்டும் ஸ்டேட்மெண்டு

1352 பசலி			1353 பசலி			1354 பசலி			1355 பசலி		
1418	14	0	1887	2	10	2651	8	1	3043	2	1
13	4	9	21	6	6	26	12	10	30	12	7
58	14	4	27	15	6	153	10	2	272	10	4
2149	8	11	2427	10	2	4543	15	11	4374	15	5
133	2	0	36	6	0	180	12	6	583	3	6
0	6	0	32	3	5	67	6	2	11	3	0
32	14	0	35	5	0	56	5	6	85	10	0
7	6	0	22	13	3	79	3	0	25	7	0
58	5	0	56	14	10	6	10	6	52	1	6
161	13	11	228	10	9	610	3	6	787	15	9
30	14	0	13	10	9	58	9	8	...	...	...
4045	6	11	4790	2	10	8435	1	10	9267	1	2

Koviloor Digital Library

ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமபுர ஆதினம்.
C250. 60: P. I. C. Q. H. No. T. E. 68-

Koviloor Digital Library

APPENDIX

Visitors' Remarks.

We had the pleasure of visiting the Devaram school and we enjoyed the recitation given by two of the pupils. We wish the institution all success.

Sir R. K. Shanmugham Chettiar,
Dr. Raja Sir Annamalai Chettiar
of Chettinad.

9, Feb. 1943.

தருமை ஆதீனப் பாடசாலையில் தேவார மாணவர்களில் இருவர் தமிழ் மறையாம் திருமுறையை இசையுடன் இசைத்ததைக் கேட்டு இன்புற்றேன். இதனால் தமிழ்த் தாய்க்கும், தமிழிசைக்கும் பெருந்தொண்டைச் செய்த பெரும்பயனை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் பெற்றவர்களாவார்கள்.

தருமையாதீன இசைப்புலவர், எட்டயபுரம்
சமஸ்தான வித்துவான் இசையரசு, தேவாரமணி,
எம். எம். தண்டபாணி தேசிகர்
24—5—1943.

ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆதி குருமகாசந்நிதானங்களின் குருபூசை சமயத்தில் வந்திருந்த சமயத்தில் ஆதீன வேதசிவாகம பாடசாலை மாணவர்களும், தேவாரப்பாடசாலை மாணவர்களும் அவரவர்களது தேர்ச்சியைக் காண நேர்ந்ததானது

Koviloor Digital Library

மிக்க மகிழ்ச்சியைத் தந்தது. இம்மாணவர்கள் வருங் காலத்தில் சமய உணர்ச்சியை எங்கும் பெருக்கப் பேருதவி யாவார்கள். இவ்விரு பாடசாலைகளும் தினம்தினம் விருத்தி யடையுமாக. இவைகளுக்குப் புத்துயிர் கொடுத்துள்ள ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானங்களுக்குத் தமிழுலகம் கடமைப் பட்டுள்ளதாகும். ஸ்ரீ சொக்கநாதரின் பேரருளால் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களும், அவர்களுடைய நல்லறங்களும் என்றும் நின்று நிலவ அவனருளைச் சிந்திக்கிறேன்.

J. M. சோமசுந்தரம் B. A., B. L.,

பழநி தேவஸ்தானங்கள் எக்ஸிகூட்டிவ் ஆபீசர்

27—5—43.

தருமபுர ஆதினத்தில் நடைபெறும் தேவாரப் பாடசாலையைப் பார்த்துப் பெரு மகிழ்வடைந்தேன். தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலிய அருணூற் பாடல்களை இன்னிசையோடு மாணவர்கள் பாடுவதைக் கேட்டு மனக்களிப் படைந்தேன். தேவாரப் பாடசாலை மாணவர்களுக்குத் தமிழ் இலக்கியம், கணக்கு, அறிவிய-னூல், ஆங்கிலம், வடமொழி முதலிய பல கலைப் பகுதிகளும் நன்கு கற்பிக்கப்படுகின்றன. திங்கள் தோறும் ஆண்டு தோறும் தேர்வு நடைபெறுகின்றன. இதனால் மாணவர்கள் இளமையிற் கற்கக்கூடிய இன்றி யமையாதன யாவும் கற்றுத் தேர்ச்சிபெற்று உயரிய கல்வி பயிலத் தகுதியுடையவர்களாகின்றார்கள். இத்துணைச் சிறந்ததொடக்கக்கல்லூரி இவ்வாதீனத்தில்தான் நடத்தப் பெறுகின்றதெனத் தெரிகிறது, இதற்குத் தமிழுலகம் ஆதீனத் தலைவர்களாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக பரமா சாரிய சுவாமிகளுக்கு என்றும் கடமைப் பட்டுள்ளது. இக்

Koviloor Digital Library

கல்லூரி எதிர்காலத்தில் சிறந்த பெருங்கல்வி நிலையமாக உருவெடுத்து விளங்கும் வண்ணம் இறைவன் திருவருளை வழுத்துகின்றேன்.

கா. சுப்பிரமணியப் பிள்ளை, M. A., M. L.,
தமிழ்ப் பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
18—7—43.

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனத்து 24-வது மகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளால் நடத்தப்பெறும் அரும் பெரும் செயல்களில் முன்னணியில் உள்ள தேவாரப் பாடசாலையில் மாணவர்களுக்குப் பாடங்கள் வகுக்கப் பெற்றும், சாத்திர முறைப்படி போதிக்கப்பெற்றும் வருவது போற்றத்தகுந்தது ஆகும். இப்பாடசாலையில் பயிலும் மாணவர் எல்லோரும் எதிர்காலத்தில் நுண்ணறி வாளர்களாய் வருவதற்கு ஏதுவாயிருக்கும் என்று ஊகிப் பதற்குப் பல சான்றுகள் தோன்றுகின்றன. இது என்றும் வாழவேண்டும் என்றும், இதை அழகுபெற நடத்துவிக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் திருவடி போற்றப் படுவதாகும் என்றும் கூறி அப்பெரியாரின் திருவடிகளை வாயாரப் போற்றுகின்றேன்.

P. T. S. குமரசாமி செட்டியார்,
கும்பகோணம்.
August' 43.

I have found very great pleasure in visiting the Dharmapuram School, its various buildings and extensive gardens. I have also been privileged to pay my namaskarams to His Holiness.

Koviloor Digital Library

The whole Dharmapuram Mutt is so well managed and organised that I have found it easy to visit all the places. My thanks to the management.

C. V. Kamukutty,
Professor,
Indraprasta College, Delhi.
28—8—43.

தருமபுரம் தமிழ்மறைக் கல்லூரி மாணவர்களில் சிலர் ஆசிரியரோடு கலந்து மறையின் அமுதைப் பண்களிக்கப் பாடினர். கல்லூரித் தமிழ்ப்புலவர் வித்துவான் மு. ஆறுமுக தேசிகரோடும் அளவளாவினோம். தமிழ் மறை இசையமுதம், இன்பம் பெருக்கி உளங் கனிவித்தது. புலவரது அளவளாவலால் கல்லூரியில் பயிற்றுவிக்கும் இயல் தமிழ்ப் பகுதிகளை யறிந்து உவந்தோம். விரைவில், இஃது ஒரு பெருந்தமிழ்க் கல்லூரியாக, கடவுட்கொள்கைச் சுடர் பரப்பும் அருள்ஞான நிலையமாக விளங்குக என ஆதின பரமாசாரிய அடிகளாரின் திருத்தாண்மலர் போற்றுகின்றோம்.

இரத்தினம் B. A., B. L.,
டிஸ்ட்ரிக்ட் முன்சீப்,
மன்னார்குடி.

ஆ. கஜபதி, B. A., B. L.,
டிஸ்ட்ரிக்ட் முன்சீப்,
சிதம்பரம்.

சி. இராமலிங்கன், M. A.,
நகராட்சி ஆணையாளன்
(முன்சிபல் கமிஷனர்)
12—9—43.

Koviloor Digital Library

சமீபகாலத்தில் தருமபுரம் ஆதீனம் வெகு முன்னேற்றம் அடைந்திருப்பதைக்கண்டு நான் மிகவும் மகிழ்ந்தேன். முக்கியமாக இப்பொழுது ஏற்படுத்தியிருக்கும் பாடசாலைகள் (வேதாகமம், தமிழ்வேதம்) என்மனதைக் கவர்ந்தன. மாணவர்களின் இனிமையான சங்கீதத்தைக் கேட்டு ஆனந்தித்தேன்.

டாக்டர் பாக்மேன்,
அட்மினிஸ்ரேட்டர். காரைக்கால்.
21—10—43.

We were impressed with all what we saw in this vast organisation of the Dharmapuram Mutt particularly its Library and artistic side and its Patasalas (religious schools) that have recently developed within these few years as regularly and systematically with syllabuses a methodical scheme apportioned among the 5 years of practical training given to this devotee students. We enjoyed their sangeetha too

Mrs. Sargunam,
Inspectress of Girls' Schools,
1JI circle Madras.

Mrs. R. Bexell
Coimbatore.

Mrs. R. Erichson

Mrs. T. P. Srinivasan,
Deputy Inspector of schools
(on leave.) Mayavaram.
21—10—43.

It has given me immense pleasure to see the Agama and Thevara patasalas so eminently conducted by the Dharmapuram Adhinam, and I am sure the results of

Koviloor Digital Library

these schools will fructify before long. This is the only successful way of improving and spreading our religion in the way in which it ought to be done. I see activity on all sides which will serve as a beaconlight. My respectful thanks are due to His Holiness for the splendid steps he has taken towards the spread of Saiva Siddhantha.

R. S. Naidu Esq., Bar-at-law.
of Lincolu-Inu
Executive officer,
Madura etc. Devasthanams.
21—12—43.

மேலான தர்மபுரம் ஆதீனத்தை மறுபடியும் தெரிசனம் செய்ததைப்பற்றி நிரம்பவும் ஆனந்தமடைகிறேன். மறுபடியும் ஆதீனத்தின் மடாதிபதி சுவாமிகளைச் தரிசிக்க மகிழ்ச்சியடைகிறேன் மடமானது அதிகமாகவும், பரிமளிப்பாகவும் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறேன். ஸ்தாபனத்துக்காக காரணகர்த்தர்களுக்கு வந்தனமளிக்கின்றேன். எம்மை உபசரித்ததோடு வரவேற்றதைப் பற்றிச் சுவாமிகளுக்கு நன்றிபாராட்டுகின்றேன். மகத்தான மடாதிபதி சுவாமிகளுக்கும், ஸ்ரீ தம்பிரானவர்களுக்கும் நீடூழியான சுகவாழ்வும் பெருஞ் செல்வமும் ஏற்படும்படி கோருகிறேன்.

ஷாய் போன்வேன்.
பிரஞ்சிந்திய கவர்னர்,
12—2—44.

ஆயிரத்து தொளாயிரத்து நாற்பத்தி நாலாம் ஆண்டு பிப்ரவரிமாதம 12-ந் தேதியன்று, பிராஞ்சிந்தியா மேன்மைதங்கிய கவர்னர் துரையவர்களுக்கு, தருமபுர ஆதீனம்

Koviloor Digital Library

மடாதிபதி குருஸ்வாமிகள் தந்துள்ள வரவேற்புக்கு என்னை அழைப்பித்ததைப்பற்றி ஷை சுவாமிகளுக்கும், ஷை ஆதீனத்தின் ஸ்ரீ தம்பிரானவர்களுக்கும் எனதன் பார்ந்த நன்றி பாராட்டுகின்றேன். இச் சன்னிதானத் தின் மேலான மகிமையும், பாராட்டத்தகுந்த நிறைந்த பக்தியின் விசேஷமே. ஷை மடத்தின் பீடஸ்தாபனம் மெச்சத்தக்கது.சிவபக்தர்களுக்கு இடைவிடாபக்தியும்,மதக் கல்வியும் புகட்டும் மேன்மையை அடைந்துள்ளது. இந்த மகத்தான சந்தர்ப்பத்தில்நான் மிக்கமகிழ்ச்சியடைந்தேன். இப் பெருந்தகையான ஆதீன குரு சுவாமிகள் எங்கும் நிறைந்த இறைவனருளால் நீடூழியாகவும், மிகச் சிறப் பாகவும், மங்களகரமாகவும் பிரகாசிக்கக் கோருகிறேன். அவர் அருளால் படர்ந்த உலகமும், எல்லா பக்தர்களும் பரிபூரண ஆனந்தமாய் உய்யவேண்டும். பரஞ்சுடர்போல குருஸ்வாமிகள் தமது சிஷ்யர்களுக்கு ஆசீர்வாதம் செய்யப் பிரார்த்திக்கின்றேன்.

க. சாம்பசிவம்,
பிரஞ்சிந்தியா பைனன்ஷியல் & கொலோனியல்
கமிட்டி பிரசிடெண்ட்.
Advocate, புதுவை.

We the members of the Advisory Committee of the Girls Middle School of Mayavaram visited the Devara School and enjoyed good music.

Mrs. Shanmukam,
Mrs. A. Meenambal B. A.,
President of the Committee.
Mrs. Parvathi Dharmarajan,
Lady Doctor, Mayavaram.
6—3—44.

Koviloor Digital Library

I visited this morning Dharmapuram Mutt and was greatly pleased to see the way in which the mutt is organising the publications and popularisation of Saiva Literature and religion.

Sir S. Radhakrishnan,
Vice Chancellor,
Benares Hindu University.
25—6—44.

இற்றைநாள் தருமபுர ஆதீனப் பாடசாலைகளைக் காணும் பேறுபெற்றேன். மாணவர்களின் துப்புரவு நிலை மற்றைப் பள்ளிகளிலும் காணக்கிடைக்காத ஒரு சிரிய தன்மையிலிருப்பது கல்வித்துறையாளர்க்கு ஒரு பெருமகிழ்வைக் கொடுக்குமென்பதிற் சிறிதும் ஐயமில்லை பாடத்திட்டம், நடத்துமுறை, பழக்கம் முதலியன அனைத்தும் சைவமும் தமிழும் ஒருங்கே கலந்து மணக்கும் தனிப்பெரு படத்தின் பெருந்தகைமையை நன்கு வெளியிடுகின்றன.

இயற்கை எழிலும், நற்காற்றும், இனிய சுற்றுப்புறமும் பெற்றுள்ள இப் பள்ளிகளில் இருப்போர் பெரும் பேறு பெற்றவர்களே.

இதை நடத்தும் ஆசிரியர்கள், கண்காணிப்போர் முதலியவர்களின் சிரிய சேவைத்திறன், இப்பாடசாலைகளில் பயிலுவோருடைய அருமையான திறமைகளிலிருந்து நன்கு புலனாகின்றது.

சோ. திருநாவுக்கரசு, பி. ஏ., எல். டி.,
சென்னை. நகராண்மைக்கழகப்பள்ளிகளின்
மேற்பார்வையாளர்.
29—10—44.

Koviloor Digital Library

ஸ்ரீ தருமபுரத்தில் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசன்னிதானத்தினுல் நடத்தப்படும் வேதாகம பாடசாலே மாணவர்களேப் பரீக்ஷைசெய்தேன், இந்தப் பாடசாலேயின் பாடத் திட்டங்கள் மிகவும் நன்ருக இருக்கிறது. அநேகம் பாடசாலே களுக்கு போயிருக்கிறேன். அவைகளெல்லாவற்றை விட இப்பாடசாலே சரியான முறைகளில் பாடங்களே யமைத்து நன்ருய் நடத்திவருவதைக்கண்டு ரொம்பவும் சந்தோஷ முள்ளவனுக ஆனேன். ஆதிசைவ மாணவர்கள் கல்வி யிலும், ஒழுக்கத்திலும் சிறந்தவர்களாகி அதன்மூலம் சிவாலயங்களில் நித்யாதி பூஜைகளில் சிறந்தவர்களாக ஆகும்வண்ணம் பெருமுயற்சியுள்ள ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசன்னிதானம் அவர்கள் நீடுழிகாலம் அரோக திடகாத்திரமாய் வாழ இறைவனேப் பிரார்த்திக்கின்றேன்.

சுப்பிரமணிய குருக்கள்,
பருத்தியூர்.
6--11—44

ஸ்ரீ தர்மபுரத்தில் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசன்னிதானத்தினுல் நடத்தப்படும் ஆகமவேத சாஸ்திர பாடசாலேயில் மாணவர்களேப் பரீக்ஷைசெய்தேன். இந்தப் பாடசாலேயில் பாட திட்டங்கள் ரொம்பவும் நன்ருக இருக்கிறது, அநேக பாடசாலேகளேயும் பார்த்திருக்கிறேன். இந்தப் பாடசாலே யில் நடக்கிற பாடங்கள்போல வெளி பாடசாலேயில் நான் பார்த்ததில்லே. பிள்ளேகளும் புத்திமான்களாக வும், படிப்பில் சிரத்தையுற்றவர்களாகவும், ஆசார முள்ளவர்களாகவும் இருப்பதைப்பார்த்து எனக்கு ரொம் பவும் சந்தோஷம். இந்தப் பாடசாலேயைச் சாசுவதமாக ஸ்தாபித்தவர்களான ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசன்னிதானம் அவர்

Koviloor Digital Library

களுக்குத் தீர்க்கமான ஆயுளும், ஆரோக்கியமும் சகல தர்ம பிரதிஷ்டாகீர்த்திகளும் ஈசுரானுக்கிரஹத்தினால் அபிவிருத்தியடையவேண்டும்.

கோபால சாஸ்திரிகள்,
வேத சாஸ்திர பரீக்ஷகர்.
வைத்தீசுவரன்கோவில்.
7—11—44

நானும் சில நண்பர்களும் இன்று மாலை தருமபுரம் ஆதீனத்தில் நடத்தப்பட்டுவரும் தேவாரப் பாடசாலையைப் பார்வையிடும் பாக்கியத்தைப் பெற்றோம், சிறுவர்கள் திருநீறணிந்து, சிவப்பிரகாசமாய் விளங்க அவர்களைப் பார்ப்பதற்கே மனதில் ஆனந்த முண்டாகியது. அவர்கள் தேவாரங்களில் சில பாடியதைக் கேட்க அதிலும்மேலான ஆனந்தமடைந்தோம். சைவம் தழைத்தோங்குவதற்குத் தேவாரத் திருக்கூட்டம் இன்றியமையாத ஒரு சாதனம், இதை ஸ்ரீ-ல-ஸ்ரீ பண்டாரசன்னதியவர்கள் நனகறிந்து கடைப்பிடித்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. இவ் வாதீனம் இவ்வகையான கைங்கர்யங்களில் சிறந்தோங்கி நின்று மேன்மேலும் உயர்ந்தோங்க வேண்டுமாறு எல்லா ஆஸ்திகர்களும் பிரார்த்திப்பார்களாக.

எப். ஜி. நடேசய்யர்,
மாஜி இரயில்வே ஜில்லா சூப்ரண்டண்ட்,
முனிசிபல் சேர்மன்
திருச்சி.
7—11—44

Koviloor Digital Library

I am very fortunate in having been to Dharmapuram today, for I have been given an opportunity to meet the senior boys of the Devara section. I feel honestly that their knowledge in Tamil is equal to that of an S. S. L. C., and their ability to write original composition is also satisfactory. They are indeed well versed in Devaram and I wish them every success in every walk of life. Needless to say that the junior boys are also up to the standard.

K. M. Venkataramayah, M. A., B. O. L.
Senior Tamil Pandit,
St. Columbia's High School, Chingleput.
17—12—1944.

I visited Dharmapuram village today, with a view to show the improvements carried out by the mutt authorities to perform the village uplift and sanitation. The Superintendent of the mutt took me and my students to the school and Devaram and agamic sections. It is realy a great pleasure to me that the schools have been located in the midst of a pleasant garden with good ventilation. The devaram parties sang 2 or 3 melodious songs and it was very pleasing. The efficiency of the students is due to the untiring efforts taken by mutt authorities. I wish every success to the school.

K. Ekambaram,
Headmaster,
V. H. M. Training school.
22—11—45.

Koviloor Digital Library

It has given us very great pleasure to visit this school managed by this Dharmapuram Adhinam. The various activities of the Mutt including the Agama section and the Thevaram classes are the unique features of this Adhinam. One is reminded of the good old days when instruction was offered in Hindu ideal conditions, and we wish more of this type to spring up in order that training including the correct character formation be instilled in our boys and girls. We are very thankful for the opportunity given to go round the institution and to record our pleasant impressions on the occasion.

Mrs. M, S. Swarnambal, M. A., L. T.,
Superintendent, Govt. Hobart School,
Royapettah.

Mrs. Nityavenkataraman, B. A.,
Headmistress,
Govt. Middle School for Girls,
Mayavaram.

Mrs. S. Ranjitham Naidu, M. A., L. T.,
Commandant, W. A. I. C. C.
17—2—45.

இற்றைநாள் யானும் எனைச்சேர்ந்த சிலருமாக இத் தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த பாடசாலை முதலிய சகல இடங்களையும் காணும் பேறுபெற்றோம். ஈண்டுக் காணும் காட்சியனைத்தும், மக்களைத் தன் மக்கட் டன்மையினின்று நீக்கித் தெய்வத்தன்மையிலாழ்த்தும் என்பதில் சிறிதளவு மையமில்லை.

Koviloor Digital Library

இயற்கை எழிலும், நற்காட்சியும், கலைமகள் நடனமும் பெற்ற இவ்வாதீனத்தில் இருப்போர் பெரும் பேறு பெற்றவர் என்பது உறுதியே.

ஈண்டு வதியும் மாணவர்களை நோக்கின் அறிவுரை தெய்வங்கலை பெற்ருேர் என்று கூறலாம். அவர்கள் அனைவருக்கும் செய்யும் திருப்பணியும் அளவிடலாகா. சுருங்கக் கூறின் இவ்விடம் ஓர் பூலோக கைலாயம் என்பதிற் சிறிதும் சந்தேகமில்லை என்பது என் மனக்கோட்பாடு.

வித்துவான் R. நவநீதம்,
தமிழாசிரியை,
அரசியலார் பெண்கள் உயர்நிலைப்பள்ளி,
சேலம்.
1—3—45.

இன்றைக்கு இந்த மிகப் புராதனமான ஆதீனத்தைச்சேர்ந்த பாடசாலை முதலிய இடங்களைக் காணும் சந்தர்ப்பம் வாய்த்தது. மிகவும் களிப்படைந்தேன். எங்கும் ஒழுங்கும் சுத்தமும் கண்ணைக் கவர்ந்தன. புத்தகாலயம் மிக விரிந்து, தனிச்சிறப்பான பல அரிய நூல்கள் அடங்கி மிளிர்கின்றது. இந்த ஆதீனத்தில் பல முக்கிய சைவ சித்தாந்த நூல்களை வெளியிட்டிருப்பது மிகவும் போற்றவேண்டிய பேருதவியாகும். தேவாரம் முதலிய திருமுறைகளை நேராகவும் இசையுடனும் மாணுக்கர் ஓதுவது செவிக்கு விருந்தாயிருந்தது.

மா. அனந்தநாராயணன், I. C. S.,
Dt. Judge, Tanjore.
3—6—45.

Koviloor Digital Library

Went round the Adhinam Institutions with the courtesy and kindness of the Superintendents. I was impressed with the usefulness of the activities and the organisational abilities of the Adhinam authorities.

I wish all success to the Adhinam.

(Sd.) x x x
Dt. Educational Officer, Tanjore.
22—7—45.

I had the pleasure of seeing round the mutt buildings and also the Library which is well maintained. I was very much impressed with what I saw. The orderliness and the good and efficient management of the mutt. I wish it sincerely all prosperity.

Khan Bahadur Muhammad Ismail, B. A.,
Collector & District Magistrate,
Tanjore.

The bulwark of Hindnism, I had the pleasure and privileges of seeing today with the kind permission of His Holiness of Dharmapuram Adhinam. The library contains books on all religions, especially very many volumes on Hindu Philosphy and Theology. And many a scholar benefit by it. Three elementary schools are run (one for General Education the other for Thevaram and the third for Agama) The teaching in these institutions is induced with religious fervour and this is certainly bound to stem the tide of anti-Hindu propaganda

Koviloor Digital Library

The teaching of the 'R' s combined with religion is fine. Thevaram and Tirupughaz songs are sung in the proper time and their singing is an eloquent testimony to the spirit lying behind it.

I thank the Adhinam and wish all their activities an unjustified success.

V. Singaravelu, B. A., L. T.,
Personal Assistant to the D. E. O.
Saidapet.
15—7—45.

Deeply impressed with the grandeur of the Library and the orderlines of the patasalas of the Adhinam.

A. S. Devanesan,
Headmaster,
L. M. C. High School, Shiyali.
23—7—45.

The Superintendent of the Thevara school is inclined to get Educational Department's recognition for it. The time table shows imparting of liberal secular education along with religious instruction. He may move the Department in the matter. I was delighted to see the beautiful library. I find progressive modern tendency about the whole mutt atmosphere.

M. Dhawood.
Personal Assistant to the D. E. O.
Tanjore.
28—8—45.

Koviloor Digital Library

திருக்கைலாய பரம்பரைத் தருமையாதீனத்துத் தேவார பாடசாலையைக் கண்டு அங்குச் சிறிதுநேரம் தங்கி ஆசிரியர்களோடும் மாணவர்களோடும் அளவளாவும் பேறு இன்று ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசன்னிதானத்தின் அருளால் எனக்குக் கிடைத்தது. 1941-ல் தொடங்கப்பெற்று இனிது நடந்துவரும் இப்பாடசாலையில் இப்போது 14 மாணவர்கள் இருந்துவருகின்றனர். இவர்கள் தேர்ச்சிக்கேற்ப மூன்று வகுப்பினராகப் பிரிந்து பாடங்கற்றுவருகின்றனர். தேவாரத்தையும், தமிழிலக்கிய இலக்கணம் சமயம் ஆகிய இவற்றையும் கற்பிப்பதற்கு மிக்க தகுதி வாய்ந்த நல்லாசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். சங்கீதம், மிருதங்கம், பிடில் ஆகிய இவற்றைக் கற்பிக்கவும் தனித் தனி ஆசிரியர்கள் உளர். கட்டிடம் சுத்தமாக இருக்கிறது.

இது தேவாரபாடசாலையே யாயினும், தமிழ் இலக்கிய இலக்கணம், சரித்திரம், கணிதம், சுகாதாரம், வடமொழி, சமயம் ஆகிய இவையும் கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாணவர் உலகியலறிவையும், தேவாரத் திருமுறையிலறிவையும் வளர்த்தற்கான பாடங்களையும் சேர்த்துக் கற்பித்துவருவது பாராட்டற்குரியது. சிறிதளவு உலக பூகோளபாடமும் கற்பித்தால் நலம்.

தேவார திருவாசக திருமுறைப் பாசுரங்களையும், பிற பாசுரங்களையும் ஒரு பாடத்திட்டப்படி கற்பித்துவருவதும் பாராட்டத்தக்கது. பாசுரங்கள் பிழையின்றி கூடிய வரையில் பொருளுணர்வுடனேயேயும் மாணவர்களால் ஓதப்படுகின்றன, ஆசிரியரும் மாணவர்களும் மிகவும் இனிமையாக இவற்றைப் பாடுகின்றனர்.

மாணவர்களில் மூவர் தமிழ்ப் புகுமுக வகுப்பும் (Entrance) பரீக்ஷைக்கு 1946ல் போக ஆயத்தமாயுள்ளனர்.

Koviloor Digital Library

மாணவர் சங்கமொன்றும் இனிது நடைபெற்று வருகிறது. மாணவர்கள் அதன் துணைகொண்டு, பேசும் ஆற்றலும், எழுதும் ஆற்றலும் பெற்றுவருகின்றனர்.

அரசாங்க அங்கீகாரம்பெற்ற பள்ளிக்கூடங்களைப் போலவே, இங்கும் பாடங்கள் பாடத்திட்டத்தையும் கால அட்டவணையையும் பின்பற்றிக் கற்பிக்கப்பட்டுவருவது மிகவும் மெச்சத்தக்கதே. இத் திரு மடாலயத்தில் உள்ள அரும்பெரும் நூல்நிலயம், காரியாலயம் முதலிய அமைப்புகள் யாவும் ஒழுங்காய் ஒரு திட்டத்தின்படி நடைபெற்றுவருவது காண்டற்கினிய காட்சியாயுள்ளது.

மாணவர்கள் உடல்நலத்தோடும் உற்சாகத்தோடும் பயின்றுவருகின்றனர். பயிற்சி முடிந்தபின்னர், இவர்கள் தத்தம் துறையில் சிறந்து விளங்குவர் என்று எதிர்பார்க்கலாம்.

ஆகமபாடசாலையைக் காண அவகாசமில்லாதுபோயிற்று. ஆங்கும், பாடங்கள் ஒரு பாடத்திட்டத்தின் ஒழுங்காக நடந்துவருவதாகக் கேள்வியுற்றேன். சிவாகமாதி நூல்களை முறையாய்க்கற்ற ஆதிசைவர்கள் கிடைப்பதரிதாகவரும் இக்காலத்தில், ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் இப்பாடசாலையை இனிது நடத்திவருவது பெரிய சிவப்பணியாகும். இவ்விரு ஸ்தாபனங்களேயன்றி சாதாரண பாடசாலை, அச்சகம் முதலிய பலவற்றையும் உலகோபகாரம் என்றே கருதித் திறம்பட நடத்திவரும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்திற்குச் சைவுலகம் பெரிதும்

Koviloor Digital Library

கடைமைப்பட்டுள்ளது. நல்ல ஓதுவார்களும், ஆதிசைவ அருச்சகர்களும் தமிழகத்திற்குப் போதிய அளவு கிடைப்ப தற்கு இவ்விரு பாடசாலைகள் துணைசெய்யவுள்ளன.

ச. சச்சிதானந்தம் பிள்ளை, B. A., L. T.,
ரிடையர்ட் ஜில்லா எஜுகேஷனல் ஆபீஸர்,
வேலூர். (N. A. Dist)
22—12—45

சைவ சித்தாந்தங்களை ஒழிக்க முயற்சியெடுக்கும் இக் காலத்தில் திருத்தருமபுர ஆதீனம் அவர்களின் முயற்சி யால் இத்தேவார பாடசாலை நடைபெறுவதைக்கண்டு பெருமகிழ்ச்சியடைந்தேன். தேவாரம் திருப்புகழ் பாடிக் கேட்டேன். இத்தேவார பாடசாலைப்பிள்ளைகள் என் மனதைக் கவர்ந்தார்கள். சைவத்திற்காகத் திருத்தருமபுர ஆதீனம் செய்யும் கடமையை நாங்கள் என்றும் மறக்க முடியாது.

இப்படிக்கு
தே. அ. ராசுப்பிள்ளை.
11—6—46.

பழமையாகிய ஞானபீடமாகிய திருத்தருமபுர மடா லயத்தைத் தரிசிக்கும் பேறு இன்று எனக்குக் கிடைத்தது பற்றி மகிழ்ந்தேன். இன்று மகாசந்நிதானங்கள் இங்கு இல்லாதபடியால் அவர்களைத் தரிசிக்கும் பேறு பெறக் கூடாமைபற்றி வருந்துகின்றேன். மகாசந்நிதானங்களின் திருவுளப்பாங்கின்படி இங்கு நடைபெறும் தேவார பாட சாலை, ஆகம பாடசாலை, புத்தகசாலை முதலிய பற்பல சிவ தருமங்களின் முயற்சிகளைக் கண்டும் தேவாரப்

Koviloor Digital Library

பிள்ளைகள் இனிமையாய்ப் பாராயணம் செய்த இன்னிசையைக் கேட்டும் மிக மகிழ்ச்சியடைந்தேன். இம் முயற்சிகள் தற்கால அவசியங்களை அனுசரித்துத தக்கவாறு நடைபெற்றுவருவதும் பெருமகிழ்ச்சிவிளைக்கின்றது.

திவான்பகதூர் திரு. C. S. இரத்தினசபாபதி முதலியார், C. I. E.
கோவை
23—2—46.

As the guests of the Dharmapuram Adhinam we had a sight of the various institutions managed by the Mutt. The library has a very good collection of philosophical books in all branches of the subject. We were privileged to hear some songs sung by the Thevaram School and were much impressed with the high order of music. The printing section does very valueable work by publishing and popularising books in various branches of religion and philosophy.

P. N. Ram.
Retired Accountant General.
12—4—46.

I am much impressed with the management of the mutt. This Adhinam has a very useful library. It is highly pleasing to see that the Adhinam is maintaining a group of members doing Thevara Bajana. The staff of the Adhinam appear to be educated and they are endowed with pleasing manners.

R. Duraiswamy Mudaliar.
Dy. S. P. Kumbakonam.
19—4—46.

Koviloor Digital Library

I am much impressed with the excellent management of Devara Patasala, Agama Patasala and the Elementary school. The library is maintained in a beautiful condition.

The manuscripts are maintained neatly. I do not know how many of them have come to print.

(Sd). x x x
Assistant Tahsildar, Mayavaram.
23—4—46.

On my way back from Aurabindo Ashram, I visited the Shiyali Devasthanam. Impressed with the treatment at the devasthanam office. I enquired and came to know that it belonged to the Dharmapuram Mutt. I visited the library and school of the mutt and found that much is being done in the cause of religion. The splendid library is maintained well and those who are in quest of knowledge can use it properly. His Holiness is doing real good to a large number of people.

Achuthan Vaidyar,
Lawyer and a trustee of
Sri Ramaswami temple, Tellichery.
28—4—46

சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதற்காக ஏற்பட்ட இம்மடமானது வாழையடி வாழையாகவந்த திருக்கூட்டத்துக்குருமூர்த்திகளினாலே சிறப்புற பரிபாலிக்கப்பட்டு இந்நாட்டின் நலத்திற்காக அருந் தொண்டு புரிந்துவருகிறது.

Koviloor Digital Library

இதன் அங்கங்களாக அமைந்த சைவாகம வடமொழித் தமிழ்மொழிப் பாடசாலைகளும், தமிழ்மறைக் கழகம் தமிழ்க்கல்லூரி என்றின்னவும் சிறப்புற நடந்துவருகின்றன. உண்மைச் சமயத்தின் ஒளி மழுங்கி உலகாயத நெறி தலையெடுத் தாரவாரிக்கும் இக்காலத்திலே இத்தகைய மடாலயங்கள் கண்ணுங்கருத்துமாகப் பரிபாலித்தாலன்றி முன்னோரானுட்டப்பெற்ற சைவசமய நெறி விளக்கமுறுதற்கில்லை, இவ்வுண்மையினை யோர்ந்து மேலேகண்ட அறிவுநெறிகளைச் செம்மையுறப் பரிபாலிப்பான் எழுந்தருளியிருக்கும் குருமூர்த்திகளின் திருவுள்ளம் மேன்மேலும் சிறப்புறுகவெனத் தில்லைக் கூத்தப்பிரான் திருவடிகளை வழுத்துகின்றேம்.

விபுலானந்தர்,
Professor of Tamil, University of
Ceylon.
30—4—1946

I was kindly received by His Holiness the Mutt on 9th August 1946, I on behalf of the staff of Govt. Head quarters Hospital, Tanjore wish to express deep gratitude of the generosits of His Holiness towards their welfare. I visited the library, a wonderful collection of books throughout India I have never seen such a well established Mutt.

T. E. Palmer.
Major I. M. S.
D. M. O. Tanjore.
9—8—46.

Koviloor Digital Library

தருமபுரம் மடம், தேவாரம், லைப்ரரி, அச்சாபீஸ் முதலியவற்றைப் பார்த்தேன். என்னிடம் காட்டிய அன்பிற்கும் இந்தசந்தர்ப்பம் அளித்ததற்கும் வந்தனம்.

அட்மினிஸ்ட்ரேட்டர்,
காரைக்கால்
6—2—47

I must thank His Holiness for his kind invitation to visit him. The library is very interesting.

MacLaughin
Collector of Tanjore.
7—5—47.

இம்மடத்தை வந்து பார்க்க மிகவும் சந்தோஷம். ஆலயம், நூல்நிலையம், வித்வான் வகுப்புப் பிள்ளைகள் முதலிய அனைத்தையும் பார்த்தோம். தேவாரப் பாடசாலை பிள்ளைகள் தேவாரம் பாடக்கேட்டு மிக இன்புற்றோம். மடத்தார்செய்யும் சமயப் பிரசாரத்தொண்டையும் பார்த்தோம். ஈசன் அருளால் இம்மடம் சமயத்தொண்டிலும் தமிழ்த்தொண்டிலும் ஈடுபட்டுச்சிறப்பாக விளங்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். சுவாமிகளும் இத் தேவப் பணியாற்றுவதில் ஊக்கத்துடன் இருப்பது மகிழ்ச்சித் தரக்கூடிய விஷயமாகும்.

Hon. Mr. T. S. அவினாசிலிங்கம் B. A., B. L.,
Minister for Education, Madras.
அ. வேதரத்னம் M. L. A.,
நா. ரெங்கசாமி M. L. A.,
T. சுப்பய்யா
12—5—47

ஞானசம்பந்தம் பிரஸ், தருமபுரம்,

SAW. GANESAN
KARAIKUDI. S. I. R.

Koviloor Digital Library

Koviloor Digital Library